புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையத்தினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் திறந்து வைத்து, மாணவர்களின் அறிவியல் சார்ந்த படைப்புகளை பார்வையிட்டார்கள். உடன், இணை இயக்குநர்கள் முனைவர் வை.குமார் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி), மா.இராமகிருஷ்ணன் (மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்), முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், அமெரிக்கன் இந்தியா பவுண்டேஷன் டிஜிட்டல் ஈக்வலைசர் திட்ட இயக்குநர் டாக்டர்.பாஸ்கரன் தீனதயாளன், ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 6 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தேசிய, சர்வதேச விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவுகளுக்காகவும், உயர் பயிற்சி உபகரணங்கள் வாங்குவதற்காகவும் மொத்தம் 13.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாநிலக் கல்விக் கொள்கையை விளக்கி துண்டுப் பிரசுரங்கள் வழங்கல்!

11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து - மாணவர்களுக்கு முதல்வர் கொடுத்த பரிசு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கை!

சென்னை, ஆக.14-

சமத்துவம் மலரச் செய்யும் ஆயுதம் மாநிலக் கல்விக்கொள்கை என்றும், 8-ஆம் வகுப்பு வரை அனைவரும் தேர்ச்சி, 11-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை மாநிலக் கல்விக் கொள்கையில் சேர்த்து வெளியிட்டிருப்பது இலட்சக் கணக்கான மாணவர்களுக்கும் அவர் தம் பெற்றோர்களுக்கும் நம் முதல்வர் கொடுத்த பரிசு என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கல்வி என்பது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை, அதனால் தான் தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதனுக்கும் கல்வி சென்றுசேர வேண்டுமெனத் திராவிட இயக்கத் தலைவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அதைப் பொறுக்க முடியாத சனாதன ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள் அதன் அடியாளாகச் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மூலம் கல்வியைக் குறிப்பிட்ட சமூகத்துக்கு மட்டுமே என்றாக்கி ஏழை எளிய மக்களுக்குக் கல்வியை எட்டாக்கனியாக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை எனும் மக்கள் விரோதக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.

சமூகத்திக்கு எதிரான தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்போது அறிமுகம் செய்ததோ அப்போதிலிருந்து இப்போது வரை அதன் தீமைகளைச் சுட்டிக்காட்டி அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு அதற்கு மாற்றாக மாநிலக் கல்விக் கொள்கையை உருவாக்க' டெல்லி உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி முருகேசன் தலைமையில் 14 பேர் கொண்ட குழு ஒன்றையும் அமைத்து இந்தியாவின் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் என்பதை மீண்டும் நிரூபித்து இருக்கிறார் திராவிட நாயகர் தமிழக முதலமைச்சர் அவர்கள் தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் மத வெறுப்பை போதித்து, மத மேலாண்மைகளையும் புராண இதிகாசப் புரட்டுகளையும் கல்வி எனும் பெயரில் காவி கொள்கையை புகுத்த நினைக்கும் ஒன்றிய அரசுக்குத் தக்க பாடம் புகட்டும் வகையிலும் சாதியைத் தூக்கிப் பிடிக்காத சமத்துவத்தைப் போற்றும் வகையிலும் தமிழ்நாட்டு மாணவர்களின் நலனையும் எதிர்காலத்தையும் கருத்தில்கொண்டு மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு அரசு

8ஆம் வகுப்பு வரை அனைவரும் பாஸ்!

11ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு ரத்து!

10, 11, 12 என தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பொதுத்தேர்வுக்கு தயாராகும்போது மாணவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்கும் ஆளாகினர். எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் 11ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும் எனத் தொடர்ச்சியாக வைத்த கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை மாநிலக் கொள்கையில் சேர்த்து வெளியிட்டிருப்பது இலட்சக்கணக்கான மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோர்களுக்கும் நம் முதல்வர் கொடுத்த பரிசு.

3ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு 5ஆம் வகுப்பு எனத் தொடர்ச்சியாக மாணவர்களைத் தேர்வு எனும். சோதனைக் கூடத்தில் வைத்து அவர்களின் கல்வி சுற்கும் கனவைச் சிதைத்து தேர்வி தோற்பவர்களைக் குலக் கல்வி எனும் மோசடி வலையில் சிக்க வைக்க முயன்ற தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக 1 முதல் 8ம் வகுப்பு வரை ஆல் பாஸ் என அறிவித்திருப்பது ஆகச் சிறந்த செயல் திட்டம்.

கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட இந்த ஆல் பாஸ் திட்டம் என்பது எல்லோருக்கும் எல்லாம் என எப்போதும் மக்கள் நலனை யோசிக்கும் தம் முதல்வரின் இந்தச் செயல்திட்டம் இடைநிற்றலைக் குறைக்கும் அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களின் இடைநிற்றலை முற்றிலுமாகக் குறைக்கும் அருமருந்து

மும்மொழிக் கொள்கைக்கு சவுக்கடி; இருமொழிக் கொள்கையில் உறுதி!'

ஒன்றிய அரசு மும்மொழி கொள்கையை நாடு முழுவதும் திணிக்க முயலும் நிலையில் படிக்கத் தாய்மொழி தமிழும், உலகத்தை தொடர்புகொள்ள இணைப்பு மொழியாக ஆங்கிலமும் இருக்கும் என பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் காப்பாற்றிய இருமொழி கொள்கையில்தான் தமிழ்நாடு எப்போதும் இருக்கும் என உறுதிபடத் தெரிவித்திருப்பது இந்தியைத் திணித்து இந்திய ஒன்றியத்தின் பன்மொழித் தத்துவத்தைச் சிதைக்கத் துடிக்கும் ஒன்றிய அரசுக்கு முதல்வர் அவர்கள் கொடுத்த சவுக்கடி

பெண்கல்விக்கு முக்கியத்துவம்

இடைநிற்றலை முற்றும் முழுதாக அழித்தல்!

தற்போது மாவட்டம் தோறும் மாதிரிப் பள்ளிகள் செயல்பட்டு வரும் நிலையில் இனி வட்டார அளவில் மாதிரிப் பள்ளிகள் வெற்றிப் பள்ளிகள் என்ற பெயரில் செயல்படுத்தப்படும் என்பதும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, காலத்தின் தேவைக்கு ஏற்ப புதிய பாடத்திட்டம் உருவாக்கி அளிக்கப்படும் எனவும் தெரிவித்திருப்பது மாணவர்களின் மீதான முதலமைச்சரின் அக்கறையைக் காட்டுகிறது.

இது தவிர பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு ஏதுவான கற்றல் சூழலை உருவாக்கியிருப்பதோடு ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி மலைவாழ் மாணவர்கள், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கல்வியில் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்குச் சிறப்பு கல்வி கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதும் மனதாரப் பாராட்டத் தக்கவை.

தமிழ்நாடு எப்போதும் இந்தியாவிற்கு முன்னுதாரணமான மாநிலம் என்பதை மாநில கல்விக் கொள்கையின் மூலம் நம்முடைய திராவிட நாயகர் மீண்டும் ஒருமுறை திரூபித்துள்ளார். நம்முடைய கல்விக் கொள்கையைப் பின்பற்றி இனி மற்ற மாநிலங்கள் அவர்களுக்கென பிரத்தியேக கல்விக் கொள்கையை உருவாக்குவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

மோசமான சூழலில் சிக்கியுள்ள கல்வியைப் பொதுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் சாத்தியப்படுத்தி வரும் நம் சாதனை நாயகர் இதிலும் சரித்திரம் படைப்பார் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரும் தமிழக முதல்வரின் நடவடிக்கைக்கு மக்கள் களத்திலும், போராட்டக் களத்திலும் மாணவர் அணி உறுதுணையாக நிற்கும்

தேசியக் கல்விக் கொள்கை எனும் ஒன்றிய அரசின் நயவஞ்சகத்துக்குப் பதிலடியாக மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டுள்ள திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கும் உற்றதுணையாக இருந்த கழக இளந்தலைவர் அவர்களுக்கும் அதைச் செயல்படுத்திய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் மாணவர் அணி சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம். \

கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கையை கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், துண்டுபிரசுரங்கள், போஸ்டர்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் மாணவர் அணி கொண்டு சேர்க்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்

இவ்வாறு மாணவர் அணிச் செயலாளர் இரா.இராஜீவ் காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர்

கருப்பூர் டி.பூபாலன் மறைவு!

தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.14-

ஒருங்கிணைந்த சேலம் மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட அறங்காவலர் நியமனக்குழுத் தலைவராகவும், தொ.மு.ச. மாவட்டத் தலைவராகவும், கருப்பூர் கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றிய கருப்பூர் டி.பூபாலன் (வயது 72) அவர்கள் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவலறிந்து தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், மறைந்த டி.பூபாலன் அவர்களின் குடும்பத்தாருக்கும், அன்னாரை இழந்து வாடும் உறவினர்கள், நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன் என தமது இரங்கல் செய்தியில் தலைவர், முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ந்து ஏற்படும்

ரயில் விபத்துகளுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 14 –

பாராளுமன்ற மாநிலங்களவையில் கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் கலந்து கொண்டு 2024-25 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மொத்த ரயில் விபத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு? அவற்றுள் தடம் புரண்டது, மோதல்கள் மற்றும் லெவல் கிராசிங் விபத்து கள் குறித்தும், இந்த விபத்து களால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் விரிவான விவரங்கள், இறப்பு மற்றும் காயங்களின் துல்லியமான எண்ணிக்கை பற்றியும், ரயில்வே சொத்துக்களுக்கு ஏற்பட்ட நிதி சேதங்கள் என்ன ? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்துப் பேசிய ஒன்றிய ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஸ்ரீ அஸ்வினி வைஷ்ணவ், இந்திய ரயில்வேயில் பாதுகாப்புக்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பல ஆண்டுகளாக எடுக்கப்பட்ட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவாக, விபத்துகளின் எண்ணிக்கையில் பெருமளவு குறைந்துள்ளது.

2014-15 ஆம் ஆண்டில் 135 ஆக இருந்த ரயில் விபத்துகள், 2024-25 ஆம் ஆண்டில் 31 ஆகக் குறைந்துள்ளது.

2004-14 ஆம் ஆண்டில் 1711 (ஆண்டுக்கு சராசரியாக 171) ஆக இருந்த ரயில் விபத்துகள், 2024-25 ஆம் ஆண்டில் 31 ஆகவும், 2025-26 ஆம் ஆண்டில் (ஜூன் வரை) மேலும் 3 ஆகவும் குறைந்துள்ளது.

மனித செயல்பாடுகளின் காரணமாக ஏற்படும் விபத்துகளை குறைக்க 30.06.2025 வரை 6,635 நிலையங்களில் மையப்படுத்தப்பட்ட செயல்பாட்டு புள்ளிகள் மற்றும் சிக்னல்களுடன் கூடிய மின்/மின்னணு இடைப்பூட்டு அமைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

குறுக்கு வாயில்களில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக 30.06.2025 வரை 11,096 நிலை குறுக்கு வாயில்களில் நிலை குறுக்கு வாயில்கள் இடைப்பூட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. 30.06.2025 வரை 6,640 நிலையங்களில் மின்சார ரத்தால் பாதை ஆக்கிரமிப்பை சரிபார்ப்பதன் மூலம் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் நிலையங்களின் முழுமையான பாதை சுற்று வசதி வழங்கப்பட்டுள்ளது.

கவாச் என்பது மிகவும் தொழில்நுட்ப ரீதியாக தீவிரமான அமைப்பாகும், இதற்கு மிக உயர்ந்த பாதுகாப்பு சான்றிதழ் தேவைப்படுகிறது. கவாச், ஜூலை 2020 இல் ஒரு தேசிய ATP அமைப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தெற்கு மத்திய ரயில்வே மற்றும் வட மத்திய ரயில்வேயில் 1548 ஆர்கேஎம்மில் கவாச் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள் ளது. தற்போது, டெல்லி மும்பை மற்றும் டெல்லி ஹவுரா வழித்தடங்களில் (தோராயமாக 3000 ஆர்கேஎம்) பணிகள் நடந்து வருகின்றன. 30.07.2025 அன்று கோட்டா-மதுரா பிரிவில் (டெல்லி-மும்பை பாதை) 324 வழி கிலோ மீட்டர்களை உள்ளடக்கிய கவாச் வெற்றிகரமாக இயக்கப்பட்டது.

சிக்னலிங் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை கள் குறித்த விரிவான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக கட்டாய கடித சரிபார்ப்பு, மாற்றும் பணி நெறிமுறை, நிறைவு வரைபடத்தை தயாரித்தல் போன்றவை வெளியிடப்பட்டுள்ளன.

நெறிமுறையின்படி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களுக்கான துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு முறை மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்வண்டி ஓட்டுநர்களின் விழிப்புணர்வை மேம்படுத்த அனைத்து இன்ஜின்களிலும் விஜிலென்ஸ் கண்ட்ரோல் சாதனங்கள் (VCD) பொருத்தப்பட்டுள்ளன. மின் மயமாக் கப்பட்ட பிரதேசங்களில் சிக்னல்களுக்கு முன் இரண்டு OHE மாஸ்ட்கள் அமைந்துள்ள மாஸ்டில் ரெட்ரோரிஃப்ளெக்டிவ் சிக்மா பலகைகள் வழங்கப்பட்டுள்ளன.

பனிமூட்டமான வானிலை காரணமாக தெரிவுநிலை குறைவாக இருக்கும்போது முன்னால் உள்ள சிக்னல் குறித்து எச்சரிக்கும் விதத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன. மூடுபனியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள லோகோ பைலட்டுகளுக்கு ஜிபிஎஸ் அடிப்படையிலான மூடுபனி பாதுகாப்பு சாதனம் (FSD) வழங்கப்படுகிறது, இது லோகோ பைலட்டுகள் சிக்னல்கள், லெவல் கிராசிங் வாயில்கள் போன்ற நெருங்கி வரும் அடையாளங்களின் தூரத்தை அறிய உதவுகிறது.

பாதை தரவுத்தளம் மற்றும் முடிவு ஆதரவு அமைப்பு, பகுத்தறிவு பராமரிப்புத் தேவையை முடிவு செய்வதற்கும் உள்ளீடுகளை மேம்படுத்துவதற்கும் ஆன்லைன் கண்காணிப்பு அமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ரயில் பாதை, நடைபாதை தடுப்பு, பணித்தள பாதுகாப்பு, பருவமழை முன்னெச்சரிக்கைகள் போன்ற தண்டவாளப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை கள் குறித்த விரிவான வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாதுகாப்பான ரயில் இயக்கங்களை உறுதி செய்வதற்காக ரயில்வே சொத்துக்களின் (பணிப் பெட்டிகள் மற்றும் வேகன்கள்) தடுப்பு பராமரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. வழக்கமான ICF வடிவமைப்பு ரயில் பெட்டிகளை LHB வடிவமைப்பு ரயில் பெட்டிகளுடன் மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அகலப்பாதை (BG) பாதையில் உள்ள அனைத்து ஆளில்லா லெவல் கிராசிங்குகளும் ஜனவரி 2019க் குள் அகற்றப்பட்டுள்ளன.

இந்திய ரயில்வே அனைத்து ரயில் பெட்டிகளிலும் பயணிகளுக்குத் தேவையான தகவல்களை வழங்க சட்டப்பூர்வ "தீ அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. தீ விபத்துகளைத் தடுக்க பல்வேறு செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து பயணி களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் தீ விபத்து சுவரொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. தீ விபத்துகளைத் தடுக்க தீ விபத்து ஏற்படாமல் இருக்க, வெடிபொருட்களை எடுத்துச் செல்லக்கூடாது, ரயில் பெட்டிகளுக்குள் புகைபிடிப்பதைத் தடை செய்ய வேண்டும், அபராதம் விதிக்க வேண்டும் போன்ற செய்திகள் இதில் அடங்கும். புதிதாக தயாரிக்கப்பட்ட மின்சார ரயில் பெட்டிகள் மற்றும் சரக்கரை ரயில் பெட்டிகளில் தீ கண்டறிதல் மற்றும் அடக்கும் அமைப்பை உற்பத்தி அலகுகள் வழங்குகின்றன. புதிதாக தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டி களில் தீ மற்றும் புகை கண்டறிதல் அமைப்பையும், மண்டல ரயில்வேக்கள் படிப்படியாக தற்போதுள்ள ரயில் பெட்டிகளில் படிப்படியாகப் பொருத்தும் பணியும் நடைபெற்று வருகிறது.

ஊழியர்களுக்கு வழக்கமான ஆலோசனை மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது. உற்பத்தி அலகுகள் புதிதாக தயாரிக்கப்பட்ட பவர் கார்கள் மற்றும் பேன்ட்ரி கார்களில் தீ கண்டறிதல் மற்றும் அடக்கும் அமைப்பையும், புதிதாக தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகளில் தீ மற்றும் புகை கண்டறிதல் அமைப்பையும் வழங்குகின்றன.

தற்போதுள்ள ரயில் பெட்டிகளில் படிப்படியாக அவற்றைப் பொருத்தும் பணியும் மண்டல ரயில்வேக்களால் நடைபெற்று வருகிறது.

ஊழியர்களுக்கு வழக்கமான ஆலோசனை மற்றும் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்திய ரயில்வேயில் ரோலிங் பிளாக்கின் கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது (திறந்த கோடுகள்) பொது விதிகள்

30.11.2023 தேதியிட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, ஒருங்கிணைந்த பராமரிப்பு / பழுதுபார்ப்பு / சொத்துக்களை மாற்றுதல் பணிகள் 52 வாரங்களுக்கு முன்பே ரோலிங் அடிப்படையில் திட்டமிடப்பட்டு திட்டத்தின்படி செயல்படுத்தப்படுகின்றன.

சிறந்த பராமரிப்பு நடைமுறைகள், தொழில்நுட்ப மேம்பாடுகள், சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் ரோலிங் ஸ்டாக் போன்றவை தொடர்பான பாதுகாப்பு தொடர்பான பணிகளின் விவரங்கள் அனை வரும் தெரிந்து கொள்ளும் வகையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன என பதிலளித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காந்திபுரம் அண்ணா சிலை அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், மாநகராட்சி மேயர் இரங்கநாயகி ராமச்சந்திரன், கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத்துறை இணைச் செயலாளர்கள் வழக்கறிஞர்கள் கே.எம்.தண்டபாணி, பி.ஆர்.அருள்மொழி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட

தலைமைச் செயற்குழு முன்னாள் உறுப்பினர் கருப்பூர் டி.பூபாலன் மறைவு!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் இரங்கல்!

சேலம், ஆக. 14 -

சேலம் ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட அறங்காவலர் நியமனக் குழு தலைவராகவும் தொ.மு.ச. மாவட்ட தலைவராகவும், கருப்பூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் சிறப்பாக இயக்கப் பணியாற்றிய கருப்பூர்.டி.பூபாலன் (வயது 72) அவர்கள் மறைவு நமது இயக்கத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மத்திய மாவட்டச் செயலாளரும் அமைச்சரு மான இரா,இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ.கே.ஜெகதீசன்

ஆகஸ்ட் 14 (2020)



கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.

சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் "நச்சுக்கோப்பை" நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.

2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் "நெஞ்சுக்கு நீதி"யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.